வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.6217 /ஆ4/2025 நாள்:24.12.2025

| | | |
|---|---|---|
| பொருள் | : | தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –"தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு"–2025–2026 கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் விண்ணப்பித்தோர் விவரங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்தல் தொடர்பாக, |
| பார்வை | : | 1. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.017342/ டி(1)/ /2025 நாள் 12.12.2025<br>2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 12.12.2025<br>3. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந ந.க.எண்.017342/ டி(1)/ /2025 நாள் 24.12.2025 |

===============

பார்வை –2ல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தில், 31.01.2026 (சனிக்கிழமை அன்று நடைபெறவுள்ள "தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்விற்கு" விண்ணப்பிக்க விரும்பும், அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணாக்கர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக விண்ணப்பப் படிவங்களை 18.12.2025 முதல் 26.12.2025 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவேற்றம் செய்தல் தொடர்பான விவரங்கள்:–

மேற்குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும், தமிழ்நாடு மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 2025–2026 ஆம் கல்வியாண்டில் அரசுப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணக்கர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக 26.12.2025 பிற்பகல் முதல் 03.01.2026 வரை பதிவேற்றம் செய்யலாம் பார்வை 3–ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவுரைகள்

1. அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் UDISE CODE–ஐ பயன்படுத்தி, இத்தேர்விற்கு விண்ணப்பித்த மாணவர்களின் EMIS எண்ணினைப் பதிவு செய்தவுடன் சம்மந்தப்பட்ட மாணவனின் விவரங்கள் திரையில் தோன்றும் அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், திருத்தங்களை மேற்கொள்ளவும், விடுபட்டுள்ள விவரங்களையும் புகைப்படத்தையும் பதிவேற்றம் செய்தால் போதுமானதாகும். இவ்வாண்டு புதியதாக விண்ணப்பிக்கும் பள்ளிகள் இணைப்பில்ஸ் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி பதிவு (Register) செய்த பின் புதிய USER ID, PASSWORD கொள்ளலாம். ஐ பயன்படுத்தி மாணவர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்து

**பதிவேற்றும் செய்யும் போது நினைவில் கொள்ள வேண்டிய விவாங்கள்:**

2. தேர்வர்கள் விண்ணபத்தில் பூர்த்தி செய்துள்ள விவரங்கள் சரியானதா என்பதனை பள்ளி ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்த பின்னரே பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3. பள்ளி முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர், முகவரியினை அஞ்சல் குறியீட்டு எண் (Pin Code) பதிவு செய்ய வேண்டும்.

4. வீட்டு முகவரி என்ற கலத்தில் தேர்வரின் வீட்டு முகவரி மட்டுமே பதிவு செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் பள்ளியின் பெயர் மற்றும் முகவரியினை பதியக்கூடாது

5. பெற்றோரின் தொலைபேசி/அலைபேசி என்ற கலத்திலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி/அலைபேசி எண்ணையே பதிய வேண்டும்.

6. பதிவேற்றம் செய்த விவரங்களை ஒப்புகைச் சீட்டைக் கொண்டு தேர்வரின் விவரங்கள் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7. மேற்படி தேர்விற்கான தேர்வுக் கட்டணம் ரூ.50/- வீதம் Online –இல் செலுத்த வேண்டும். தேர்வு கட்டணம் செலுத்த இறுதி நாளான 03.01.2026 மாலை 06.00 மணிக்குள் Online –இல் தேர்வுக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

8. பதிவேற்றம் செய்த விவரங்களில் பிறந்த தேதி (Date of Birth), இனம் (Community), மாற்றுத் திறனாளி (PH Candidate) ஆகிய விவரங்களில் மாற்றம் செய்யவேண்டியிருந்தால் தேர்வுக் கட்டணத் தொகை செலுத்துவதற்கு முன்னரே சரி செய்து கொள்ள வேண்டும். தேர்வுக் கட்டணம் செலுத்திய பின்னர் எந்த பதிவுகளையும் கண்டிப்பாக மாற்ற இயலாது. இத்தேர்விற்கான தெரிவுப்பட்டியல் (Selection List) வெளியிட்ட பின்னர், திருத்தங்கள் கோராத வகையில் தற்போது ஆன்லைனில் விவரங்கள் பதிவு செய்யும் போதே சரியான விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

9. பதிவேற்றம் முடிந்தவுடன் தேர்வர்களின் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் (Summary Report) வேலூர்,கல்புதூர்அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் 03.01.2026–க்குள் அனைத்து அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களும் ஒப்படைக்க வேண்டும்.

10. தபால்கள் வாயிலாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படாது எனத் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் காலம்: 26.12.2025 பிற்பகல் முதல் 03.01.2026 வளை

விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் : 03.01.2026

தேர்வுக்கட்டணம் Online –இல் செலுத்த வேண்டிய கடைசி நாள், 03.01.2026

பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் (Summary Report) மற்றும் தேர்வுக்கட்டண செலுத்துச் (Fees Receipt) வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய

நாள்:03.01.2026-க்குள் நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு விண்ணப்பங்களின் விவரங்களை பதிவேற்றம் செய்திட எக்காரணத்தை முன்னிட்டும் வாய்ப்பளிக்க இயலாது எனத் பார்வை 3-ல் காணும் செயல்முறைகளின் படி திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்வரின் விண்ணப்பங்கள் மற்றும் ஒப்புகைச் சீட்டுக்களை சார்ந்த அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தம்வசம் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஒம். //
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்.

பெறுநர்:

அனைத்து அரசு/நகரவை /ஆதிதிராவிடர் நல உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக தெரிவிக்கலாகிறது.